சுற்றறிக்கை இலக்கம் - **PE/2024/39**

எனது இலக்கம் :- TR/PE/ /2024/CIR
தேர்தல் ஆணைக்குழு,
சரண மாவத்தை, இராஜகிரிய.
2024.10.17

**TR - 06**

மிக முக்கியம்

**சகல தெரிவத்தாட்சி அலுவலர்கள் மற்றும்**
**பிரதி/ உதவி தேர்தல்கள் ஆணையாளர்கள் ஆகியோருக்கு,**

**பாராளுமன்றத் தேர்தல்கள் - 2024.11.14**

**வாக்கெடுப்பு நிலையப் போக்குவரத்து வசதிகளுக்காக இலங்கை போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளை ஈடுபடுத்தல்**

2024.11.14 ஆம் திகதி நடாத்தப்படவுள்ள பாராளுமன்றத் தேர்தலின்போது தேவைப்பாட்டுக்கமைய வாக்கெடுப்பு நிலையப் பணியாட்குழு, வாக்குப்பெட்டிகள் மற்றும் ஏனைய பொருட்களை போக்குவரத்து செய்வதற்காக போக்குவரத்து வசதிகளை செய்து கொள்ளும் பொருட்டு இலங்கைப் போக்குவரத்து சபையின் பஸ் வண்டிகளை ஈடுபடுத்திக் கொள்வதற்கான சாத்தியப்பாடு உள்ளது.

02. கடந்த சனாதிபதித் தேர்தலின்போது பஸ் வண்டிகளை வழங்கிய விலைகளில் வழங்க முடியுமென, இலங்கை போக்குவரத்து சபையின் பிரதிப் பொது முகாமையாளர் (செயற்பாடு) அவர்களினால் எனக்கு அறிவிக்கப்பட்டுள்ளதோடு அந்த விலைகள் கீழே தரப்பட்டுள்ளவாறாகும். அதற்கமைய உங்கள் மாவட்டத்தின் பிராந்திய டிப்போ முகாமையாளர்களுடன் கலந்துரையாடி உங்களுக்குத் தேவையான பஸ் வண்டிகளை முன் கூட்டியே குறித்தொதுக்கிக் கொள்ளவும். டிப்போ முகாமையாளர்களின் பெயர் பட்டியல் இணைப்பு 01 இல் தரப்பட்டுள்ளது.

- சாதாரண பஸ் வண்டி (40 ஆசனங்களுக்கு மேல்)

| விபரம் | கட்டணம் |
|---|---|
| ஒரு நாளைக்கு ஆகக்குறைந்த அறவீடு<br>ஆகக்குறைந்த கட்டணத்தின் கீழ் செலுத்தக் கூடிய ஆகக் கூடிய தூரம் கி.மீ 100<br>வழங்கக்கூடிய ஆகக்கூடிய காலம் 12 மணித்தியாலங்கள் | ரூபா. 30,000.00 |
| 100 கி.மீற்றரை விட அதிகரிக்கும் போது மேலதிக 1 கி.மீற்றருக்கான கட்டணம் | ரூபா. 165.00 |
| வழங்கப்பட்ட காலத்தை மிஞ்சுகின்ற மேலதிக 01 மணித்தியால ஓட்டத்திற்கான அறவீடு (மேலதிக காலத்தை கணிப்பீடு செய்தல் 10 கி.மீற்றருக்காக 01 மணித்தியாலம்) | ரூபா. 500.00 |
| ஒரு தினத்திற்கான இரவு நிறுத்தி வைத்தல் கட்டணம் | ரூபா. 1,500.00 |

- சாதாரண பஸ் வண்டி (40 ஆசனங்களுக்கு குறைந்த)

| விபரம் | கட்டணம் |
|---|---|
| ஒரு நாளைக்கு ஆகக் குறைந்த அறவீடு<br>ஆகக்குறைந்த கட்டணத்தின் கீழ் செலுத்தக் கூடிய ஆகக்கூடிய தூரம் கி.மீ 100<br>வழங்கக்கூடிய ஆகக்கூடிய காலம் 12 மணித்தியாலங்கள் | ரூபா.27,000.00 |
| 100 கி.மீற்றரை விட அதிகரிக்கும் போது மேலதிக 1 கி.மீற்றருக்கான கட்டணம் | ரூபா. 165.00 |
| வழங்கப்பட்ட காலத்தை மிஞ்சுகின்ற மேலதிக 01 மணித்தியால ஓட்டத்திற்கான அறவீடு (மேலதிக காலத்தை கணிப்பீடு செய்தல் 10 கி.மீற்றருக்காக 01 மணித்தியாலம்) | ரூபா. 500.00 |
| ஒரு தினத்திற்கான இரவு நிறுத்தி வைத்தல் கட்டணம் | ரூபா. 1,500.00 |

03. இதற்கமைய நீங்கள் ஈடுபடுத்திக் கொள்வதற்கு எதிர்பார்கின்ற இலங்கை போக்குவரத்து சபை பஸ் வண்டிகளின் எண்ணிக்கை எவ்வளவு என்பதை, மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர் (நிருவாகம்) அவர்களுக்கு எழுத்து மூலம் அறிவிப்பது பொருத்தமாகும். வாக்கெடுப்பு நிறைவடைந்த பின்னர் அந்த சுற்றறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ள கட்டணங்களின் கீழ் நீங்கள் பெற்றுக்கொண்ட பஸ் வண்டிகளுக்கான கட்டணங்களைச் செலுத்துவதற்கும் தயவன்புடன் நடவடிக்கையெடுக்கவும்.

04. மேலே 02 ஆம் இலக்கப் பந்தியில் குறிப்பிடப்பட்டுள்ள கொடுப்பனவுகளுக்கு மேலதிகமாக, ஒரு நாளைக்கு ரூபா 900/- என்ற தொகையை சாரதிகளுக்கான கொடுப்பனவாக செலுத்துதல் வேண்டும். வாகன உதவியாளர் (பஸ் நடத்துநர்) இருந்தால் அவருக்காகவும் ஒரு நாளைக்கு ரூபா 900/- தொகையைச் செலுத்த முடியும். இந்த பஸ் வண்டிகளை வாக்கெடுப்பு தினத்திற்கு முந்திய தினம் (அதாவது 2024.11.13 ஆம் திகதி) காலையில் விநியோகித்தல் நிலையங்களுக்கு வரவழைத்துக் கொள்வது போதுமானதாகும். அதற்கமைய இந்தக் கட்டணத்தை இரண்டு நாட்களுக்காகச் செலுத்த முடியும்.

05. இந்த வேலைத்திட்டத்தை ஒழுங்கு செய்யும் போது இத்துடன் இணைக்கப்பட்டுள்ள பட்டியலில் குறிப்பிட்டுள்ள உங்கள் மாவட்டத்திற்குரிய பிராந்திய முகாமையாளரைத் தொடர்பு கொண்டு அவரது உதவியை உங்களுக்குப் பெற்றுக் கொள்ள முடியும்.

**சமன் ஸ்ரீ ரத்நாயக்க,**
தேர்தல்கள் ஆணையாளர் நாயகம்.

**பிரதிகள் :-**

01. பிரதி பொது முகாமையாளர் (ஓட்டம்)
    இலங்கை போக்குவரத்து சபை

இது தொடர்பில் அனைத்து மாவட்டங்களதும் டிப்போ முகாமையாளர்களை அறிவுறுத்துவதற்கு தயவன்புடன் நடவடிக்கை எடுக்கவும்

02. செயலாளர், தேர்தல் ஆணைக்குழு
03. கணக்காய்வாளர் நாயகம்
04. மேலதிகத் தேர்தல்கள் ஆணையாளர்
    (தேசிய தேர்தல்கள்/ நிருவாகம்)
05. தலைமை நிதி அலுவலர்
06. பிரதம உள்ளகக் கணக்காய்வாளர்

தயவன்புடன் தகவலுக்காக

**இலங்கை போக்குவரத்து சபை.**
இல. 200, கிருல வீதி,
கொழும்பு - 05

தொலைபேசி : 011 – 2581120-4
தொலைநகல் : 011 – 2586491
மின்னஞ்சல் : ceo@sltb.lk

**இலங்கை போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர்களின் விபரம்.**

இலங்கைப் போக்குவரத்துச் சபையின் பிராந்திய முகாமையாளர்களின் விபரங்கள் கீழே தரப்பட்டுள்ளன.

| தொடர் இலக்கம் | பிராந்திய அலுவலகம் | முகாமையாளரின் பெயர் | தொலைபேசி இலக்கம் |
|---|---|---|---|
| 1 | கொழும்பு | திரு. எல்.எச்.பிரசன்ன பிரியதர்ஷன | 0771056300 |
| 2 | களுத்துறை | திரு. திலக் | 0771056700 |
| 3 | றுஹுணு | திரு. ஆர்.ஏ.பீ.குமார | 0771056800 |
| 4 | ஊவா | திரு. எல்.எல்.எஸ். லியனகே | 0771057700 |
| 5 | சப்பிரகமுவ | திரு. ஏ.எம்.பீ.கே. அழககோன் | 0771057500 |
| 6 | கம்பஹா | திரு. ஈ.என். சமன் | 0771056500 |
| 7 | வடமேல் | திரு. டீ.பீ.கே.ஏ. பத்திரன | 0771057200 |
| 8 | கண்டி | திரு. டீ. சனத் பிரசன்ன குமார | 0771057000 |
| 9 | நுவரெலியா | திரு. டீ.எம்.ஆர்.ஜே.பி. தசநாயக்க | 0771057400 |
| 10 | கிழக்கு | திரு. ஆர்.எம்.டீ. விஜித தர்மசேன | 0771058200 |
| 11 | வடக்கு | திரு. கே.கேஜிசன் | 0771058100 |
| 12 | ரஜரட்ட | திரு. ஆர்.எம்.ஏ.பி. ராஜகருணா | 0771057900 |